**தென்னை பயிர்ச்செய்கை சபை - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியக் கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு

உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் 48 ஆம் பந்திக்கு அமைய தேவையான அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ளபோது தவிர்த்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்படலாகாது எனினும் ரூபா. | 2023 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தின் நிர்மாணிப்பு 2023 ஆம் ஆண்டு இறுதியிலேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதால், அதற்கமைய | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடு |

| | | | |
|---|---|---|---|
| | 21,193,131 ஆன குறுகிய கால ஒதுக்க மீதியினுள் ரூபா. 14,485,699 ஆன செலவு மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் குறுகிய கால ஒதுக்க மீதி ரூபா 14,485,699 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முற்பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் குறித்த செயலுக்காக 2023.12.27 ஆம் திகதி ரூபா 6,436,450.44 மில்லியன் பெறுமதியுடைய பொருட்கள் வேலைத் தளத்தில் காணப்பட்டதாக ஆலோசனை நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய நிர்மாண முன்னேற்றம் இருந்தது என்பதனால், 2023 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் கொடுப்பனவைக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செய்யப்படலாகாது. |
| (ஆ) | பிணை மேவுகை ஒப்பந்தத்தின் 7.0 பிரகாரம் தீர்க்கப்படாத கடன் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்த ரூபா. 2,403,672 ஆன கடன் மீதிக்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 1,201,701 பிணை மேவுகைக் கொடுப்பனவு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை செயல்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நிகழத்தக்க சொத்தாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் கணக்கீட்டு குறிப்புக்களில் தீர்க்கப்படாதிருந்த கடன் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிகழத்தக்க சொத்துக்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் நான்கு நிறுவனங்களிடம் இருந்து போக்குவரத்து கட்டணம் மற்றும் இறக்குதல் கூலியுடன் ரூபா. 51,024,030 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட உரத்தொகையொன்று 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெரும்போக மாதிரி தென்னந் தோட்டத்தில் | இந்த உரத் தொகைக்கான விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது 2024 ஆம் ஆண்டினுள் ஆகும். அதில் சரியான முறையில் இருப்பு கணக்கிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு கணக்கீடு | இறுதி இருப்பின் பெறுமதி, நானாவித செலவுகள் மற்றும் நாற்றுமேடைச் செலவுகள் சரியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியப்படுத்தப்பட்டிருந் ததுடன் நிதிக் கூற்றுகளில் உரத் தொகையின் மொத்த செலவாக ரூபா. 50,073,908 உரத்தொகை கணத்திற்கும் போக்குவரத்து செலவு ரூபா. 777,942 பல்வகை செலவாகவும் இறக்குதல் கூலி ரூபா. 172,180 மாதிரி தென்னந் தோட்ட செலவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக இறுதி உரத்தொகையின் பெறுமதி ரூபா. 950,122 இனால் குறைவாகவும், நானாவித செலவுகள் ரூபா. 777,942 இனால் அதிகமாகவும் நாற்றுமேடைச் செலவு ரூபா. 172,180 இனால் அதிகமாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் 4 நிதி நிறுவனங்களுக்கு உரியதாக ரூபா. 209,526,817 ஆன மீள்நிதியளிப்பு கடன் மீதியின் அடிப்படையில் அந்த நிதி நிறுவனங்களினால் பிணை மேவுகை நிதியத்திற்கு வைப்பு செய்யப்பட வேண்டிய 0.5 சதவீதம் பெறுமதியான ரூபா. 1,047,634 இற்குப் பதிலாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 916,588 வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் கிடைக்க வேண்டிய பிணை காவுகை மற்றும் பிணை காவுகை நிதியம் ரூபா. 916,588 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கப்ருக்க முதலீட்டுக் கடன் திட்டத்தில் கணக்கீட்டு நடவடிக்கைகள் நிதி அடிப்படையில் நீண்ட காலமாக பேணப்பட்டு வந்துள்ளதுடன் அதற்கு அமைய 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. | கிடைக்க வேண்டிய பிணை காவுகை மற்றும் பிணை காவுகை நிதியம் சரியாக நிதிக் கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும். |
| (இ) | தலைமை அலுவலகத்திற்கான ஒரு பகுதியினை நிர்மாணிப்பதற்கு உரியதான பழைய ஒப்பந்த உடன்படிக்கையினை மீறிய காரணத்தால் ஒப்பந்தக்காரருடன் காணப்பட்ட சட்டரீதியான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 255,500 ஆனது செலவாக அடையாளம் காணப்படாது பூர்த்தி செய்யப்படாத வேலையாக இனம் காணப்பட்டிருந்தது. | பிரதான அலுவலகத்திற்கான ஒரு பகுதியினை நிர்மாணிப்பதற்குரியதாகக் காணப்பட்ட சட்டரீதியான சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா. 255,500 தொகை பூர்த்தி செய்யப்படாத வேலையாக நியமத்திற்கு அமைய இனம் காணப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களுக்கு உரிய வேலைகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | தலைமை அலுவலகத்திற்கு புதிய பகுதியொன்றை இணைப்பதற்கு உரிய ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா. 1,551,345 முற்பணத் தொகை முற்பணமாக இனம் காணப்படாது பூர்த்தி | தலைமை அலுவலகத்தில் புதிய பகுதி ஒன்றை இணைப்பதற்கு உரிய உருக்கு அமைப்பிலான பகுதியினைப் பூர்த்தி | ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாத வேலையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யும் ஒப்பந்தத்தின் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை ரூபா. 1,551,345 பூர்த்தி செய்யப்படாத வேலை கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதன் மூலம் மொத்த நிதிக் கூற்றின் பெறுமதியில் தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |
| (உ) | பத்துலு ஓயா தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரது உத்தியோகபூர்வ இல்லக் காணியில் வேலியினை பழுதுபார்த்தல் உள்ளிட்ட உத்தியோகபூர்வ இல்ல திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலாக மாரவில பிரதேச அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 1,531,659 ஆன முற்பணம், முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பழுதுபார்த்தல் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் அந்த சொத்துக்களின் பராமரிப்பிற்காக என்பதானால் அதன் போது சொத்துக்களின் மூலதன வடிவத்தின் பெறுமதியில் அதிகரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | பழுது பார்த்தல் செலவுகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதி நிலைமைக் கூற்றில் மீள்நிதியளிப்பு கடன் மீதியாக நடைமுறைக் கணக்கினுள் காட்டப்பட்டிருந்த ரூபா. 560,716,597 ஆன பெறுமதி நிதி நிறுவன மீதி உறுதிப்படுத்தலுக்கமைய மீதியாக உள்ளதுடன் 2023 திசெம்பர் மாதத்திற்கு உரியதாக நிதி நிறுவனத்திற்கு சபையினால் மீள்நிதியளிப்பு செய்யப்பட்டுள்ள ரூபா. 12,338,000 ஆன பெறுமதி அந்தக் கடன் மீதியினுள் உள்ளடக்கப்படாத காரணத்தால் மீள்நிதியளிப்பு கடன் மீதி அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கப்ருக்க முதலீட்டுக் கடன் திட்டத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் பண அடிப்படையில் நீண்ட காலமாகப் பேணப்பட்டு வந்துள்ளதுடன் அதற்கு அமைய 2023 ஆம் ஆண்டிற்கு கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. | சபையினால் வழங்கப்பட்டிருந்த மொத்த மீள்நிதியளிப்பு கடன் மீதி சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மக்கள் வங்கிக்கு உரியதாக வங்கியினால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்திற்கு அமைய மீள் நிதியளிப்பு கடன் மீதி ரூபா. 82,086,935 ஆக உள்ளதுடன் சபையின் பேரேட்டிற்கு அமைய இந்த மீதி ரூபா. | 2024 ஆம் ஆண்டில் இறுதி கணக்கினுள் அதன் தற்கால நிலைமையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீள் நிதியளிப்பு கடன் மீதியானது குறித்த வங்கியின் உறுதிப்படுத்தலுக்கு அமைய இணக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | 81,089,716 ஆன போதிலும் இந்த வித்தியாசம் தொடர்பில் கண்டறிந்து தீர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக் குறிப்புகளினுள் காட்டப்பட்டுள்ள தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான குளியாபிட்டிய, கேகாலை, களுத்துறை, மாத்தறை, மாத்தளை ஆகிய பிரதேச அலுவலகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 2 ஏக்கர் 1 ரூட் 34.4 பேர்ச்சஸ் காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தென்னை பயிர்ச்செய்கை சபைக்குச் சொந்தமான குளியாபிட்டிய, கேகாலை, களுத்துறை, மாத்தறை, மாத்தளை ஆகிய பிரதேச அலுவலகங்கள் மற்றும் உத்தியோக பூர்வ இல்லங்களில் மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2022 ஆம் ஆண்டுக்கு உரிய ரூபா.2,971,759 ஆன நிறுத்தி வைத்தல் வரித்தொகை மீளாய்வாண்டில் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டதனால் அந்தப் பெறுமதியினால் குறைபாடு மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த நிறுத்தி வைத்தல் வரி 2022 ஆம் ஆண்டுக்கு குறித்து உரித்துடையதான போதிலும் வரி இனம் காணப்பட்டிருந்தது 2023 ஆம் ஆண்டினுள் ஆகும். இதன் காரணமாக ஆண்டுக்குரிய வரிச் செலவாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் போது கடந்த வருடத்தின் மிகைக்கான செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நடப்பு ஆண்டில் இலாபத்திற்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டுக்கு உரிய செலவுகள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஒ) | 2022 ஆம் ஆண்டு பெற வேண்டிய தென்னங்கன்று போக்குவரத்து கொடுப்பனவான ரூபா. 48,888,000 பெறுமதி மீளாய்வாண்டில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் தென்னங்கன்று கொண்டு செல்லுதலுக்காகப் பெற வேண்டிய ரூபா. 48,888,000 ஆன பெறுமதிக்கு 2023 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2023 மீளாய்வாண்டில் அந்தத் தொகை வருமானம் மற்றும் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் கிடைத்த கடந்த வருடத்திற்கு உரிய பெறவேண்டிய போக்குவரத்துக் கொடுப்பனவு சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | எதுவிதமான நிர்மாணமும் மேற்கொள்ளப்படாது 2023 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தின் முன்புற பகுதிக்கு உருக்கு அமைப்பிலான பகுதியினை இணைத்தலுக்காக ரூபா. 10,679,161 மதிப்பீட்டுத் தொகை ஒப்பந்தத்திற்காக ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு ஒப்பந்த கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் முற்பணம் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், குறித்த செயலுக்காக 2023.12.27 ஆம் திகதி ரூபா. 6,436,450 மில்லியன் பெறுமதியுடைய பொருட்கள் வேலைத் தளத்தில் இருந்தது என்பதாக ஆலோசனை நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைய நிர்மாண முன்னேற்றம் இருந்தது என்பதனால், 2023 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் கொடுப்பனவிற்கு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒதுக்கம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஔ) | 2023 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகில் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 3,806,538 ஆன மதிப்பீட்டுத் தொகை ஒப்பந்தத்திற்காக ஒதுக்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு ஒப்பந்த கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் விதை உற்பத்தி அலகில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய அதற்காக ஏற்ற வேண்டிய ரூபா. 3,806,538 தொகை ஒப்பந்தத்திற்கான ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஒதுக்கம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (க) | 2023 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்ட 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா. 7,830,263 தலைவருக்கான சம்பளம் மற்றும் படிகள் மீளாய்வாண்டின் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் பாதீட்டினைத் தயாரிக்கும் போது முன்னாள் தலைவர் கொடுப்பனவுக்காக ரூபா. 7,830,263 தொகைக்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பதனால் அந்தத் தொகையினை ஒதுக்குவதற்கு முடியாது. | கடந்த வருடங்களுக்கு உரிய சம்பளம் மற்றும் படிகள் என்பன சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ங) | 2023 ஆம் ஆண்டுக்கு உரியதான திறைசேரியிடம் இருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா. 34,264,979 ஆன தொகை மீளாய்வாண்டில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாது பங்களிப்பு மூலதன மானிய நிதியத்தில் | 2023 ஆம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைத்த மூலதன மானியத்தின் மூலம் அந்த வருடத்தினுள் மூலதன சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் | மீளாய்வாண்டு திரைசேரியிடம் இருந்து பெற்றுக் கொண்டு செலவிடப்பட்ட மூலதன மானியங்கள் வருடத்தின் வருமானத்தில் இனம் |

| | | | |
|---|---|---|---|
| | வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிர்மாணித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா. 34,264,979 ஆன தொகை வருமானமாக கணக்கீடு செய்வதனால் சபையின் மொத்த இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படவில்லை. | காணப்படுதல் வேண்டும். |
| (ச) | பெருந்தோட்ட அமைச்சிடமிருந்து 2022 ஆம் ஆண்டுக்கு உரியதாக பெற வேண்டிய ரூபா. 207,660,000 ஆன பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகையிலிருந்து ரூபா. 153,430,000 ஆன பெறுகை மீளாய்வாண்டில் வருமானமாக்க கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிக்குப் பதிலாக ரூபா. 201,195,000 தொகை நாற்று செலவு கணக்கில் செலவு வைக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அமைச்சு நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அமைச்சு நிதியக் கணக்கு ரூபா. 47,765,000 குறைவாகவும் அந்தத் தொகையினால் நட்டம் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து அமைச்சின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த தொகை ரூபா. 48.8 மில்லியன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று ரூபா. 256,548,000 பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் ரூபா. 202,310,000 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது 2023 ஆம் ஆண்டு கிடைத்திருந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம், அந்த வருடத்தினுள் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கக் கூடியதாக இருந்த தொகை என்பதனால் அந்தத் தொகைக்கு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த 2022 ஆம் ஆண்டுக்கு உரிய பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதிகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஞ) | கப்ருக்க முதலீட்டுக் கடன் திட்டத்திற்கு உரியதான மீளாய்வாண்டினுள் மொத்த வட்டி நிவாரண கொடுப்பனவாக ரூபா. 16,870,720 செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டுக்கு உரிய வட்டி நிவாரண செலவு ரூபா. 427,607 ஆக இருந்ததால் வட்டி நிவாரண செலவு ரூபா. 16,443,113 கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கப்ருக்க வட்டி நிவாரண கொடுப்பனவு வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அபிவிருத்தி வேலை திட்டங்களினுள் ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் மற்றும் வட்டி நிவாரணம் வழங்குதல் கடன் வழங்கப்பட்ட வருடத்திலேயே | வட்டி நிவாரண செலவு சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்படாமை, அதே போன்று வட்டி நிவாரணம் வழங்குதல் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் வட்டி நிவாரணம் வழங்குதல் வருடத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனால் வருடத்தின் அபிவிருத்தி செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 25,000 ஆன பண்டிகை முற்பண மீதிகள் மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற 35 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,539,424 தொகை என்பன 1 வருடம் தொடக்கம் 5 வருடத்திற்கும் அதிகமான காலம் தொட்டு நிலுவையாகக் காணப்படுவதுடன் 5 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 314,807 ஆன இடர் கடன் தொகை 5 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு நிலுவையாகக் காணப்படுவதுடன் அந்தக் கடனை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பண்டிகை முற்பணம், இடர் கடன் மற்றும் சபை ஊழியர்களுக்கு வழங்கியுள்ள கடன் என்பன மீளாய்வாண்டு இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்குத் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 5 வருடத்திற்கும் அதிக காலம் கடந்திருந்த ரூபா. 2,510,599 ஆன 5 நிறுவனங்களின் 5 கடன்பட்டோர் மீதிகள் இன்னமும் அறவிடப்படாது காணப்படுவதுடன் அதில் 2 நிறுவனங்களுக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. | 2 கம்பனிகள் தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒரு பெருந்தோட்டக் கம்பனியிடம் இருந்து மற்றும் அமைச்சின் நலனோம்பல் குழுவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி உறுதிப்படுத்தப்படவில்லை. | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்குத் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் தொகுதியில் தலைமை அலுவலகத்தில் நிறுத்தி வைத்தல் தொகையில் பெறுமதி ரூபா. 4,675,343 ஆக உள்ளதுடன் அதில் 20 நிர்மாணப் பணிகளுக்காக ரூபா. 4,126,231 நிறுத்தி வைத்தல் தொகை 2 வருடத்திற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தங்களில் இருந்து ரூபா. 353,776 பெறுமதியான நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காதுடன் ஏனைய நிர்மானங்கள் பிரதேச அலுவலகம் மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டில் கணக்குகளின் மூலம் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுத்தி வைத்தல் தொகையின் மூலம் நிர்மானங்களுக்கு உரிய குறைபாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நீண்ட கால நிறுத்தி வைத்தல் தொகையினை வருமானமாக எடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த கடன் கொடுத்தோர் மூவருக்கு உரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா. 9,953,713 ஆன தொகை 3 வருடத்திற்கும் 4 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொட்டு தீர்க்கப்படாது காணப்படுகின்றது. | இந்த ஒப்பந்தக் கொடுப்பனவு பிரதேச அலுவலகத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகளுக்கு உரிய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| ------------------------ | ---------------- | ------------------------ | ---------------- |
| 2020 ஜனவரி 27 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 02 ஆம் பிரிவு, பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இல் 2.3 ஆம் பந்தி மற்றும் பொது முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் 2023 மார்ச் 20 ஆம் திகதிய PED/02/15 (i) temp 3 | தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டு இருக்காத செயல்பாட்டுப் பணிப்பாளருக்காக ரூபா. 59,650 மாதாந்த படியுடன் ஒதுக்கப்பட்ட வாகனம் மற்றும் மாதாந்த எரிபொருள் 115 லிட்டர் | தென்னை அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 2A இன் கீழ் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு செயல்பாட்டு பணிப்பாளர் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பதவிக்கு நியமிக்கும் அதிகாரமானது திருத்தப்பட்ட தென்னை | தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்டிருக்காத செயல்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்படலாகா |

| | | | |
|---|---|---|---|
| இலக்கமுடைய கடிதம் | வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் மாதாந்த படி, எரிபொருள் கொடுப்பனவு , இணைக்கப்பட்ட சாரதியின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகளாக ரூபா. 1,684,942 செலுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 10.2 (ixஅ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆகும். பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இல் 2 ஆவது பிரிவின் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவும், பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 மற்றும் 1999.10.08 இல் 1:1:6 (iii) உப பிரிவுக்கு அமைய உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றை இணைக்கக் கூடியதாக உள்ளது என்பதனால் குறித்த நியமனம், படிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் வழங்குதல் அமைச்சினைப் போன்று பணிப்பாளர் சபை ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | து. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 62,743,429 குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 389,622,417 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 452,365,846 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அமைச்சின் பெறுகைகள் மற்றும் வேறு வருமானங்கள் முறையே ரூபா. 84,197,714 இனால் மற்றும் ரூபா. 312,869,734 இனால் குறைவடைந்ததும் விசேட செயற்திட்ட செலவுகள் மற்றும் நாற்றுமேடை செலவுகள் முறையே ரூபா. 114,444,834 இனால் மற்றும் ரூபா. 230,941,832 இனால் அதிகரித்ததும் இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுதல் பின்வருமாறு ஆகும்.

| விடயம் | 2023 ஆம் ஆண்டு ரூபா. | 2022 ஆம் ஆண்டு ரூபா. | வித்தியாசம் | வித்தியாசம் சதவீதமாக |
|---|---|---|---|---|
| ------------- | ------------------------ | ------------------------ | ------------------ | ------------------ |
| **வருமானம்** | | | | |
| திறைசேரி பெறுகை | 975,528,021 | 622,520,000 | 353,008,021 | 57 |
| அமைச்சு பெறுகை | 134,226,286 | 218,424,000 | 84,197,714 | 39 |
| வேறு வருமானம் | 1,416,685,109 | 1,729,554,843 | 312,869,734 | 18 |
| **செலவு** | | | | |
| விசேட செயற்திட்ட செலவு | 114,444,834 | - | 114,444,834 | 100 |
| சம்பளம் மற்றும் படிகள் | 456,066,871 | 396,829,213 | 59,237,658 | 15 |
| நாற்றுமேடை செலவு | 959,949,795 | 729,007,963 | 230,941,832 | 32 |
| தேய்மானம் மற்றும் தேய்மான செலவு | 82,647,065 | 55,517,342 | 27,129,723 | 49 |
| கப்ருக்க முதலீட்டு நிதியச் செலவு | 28,054,451 | 18,622,731 | 9,431,720 | 51 |
| வேறு செலவுகள் | 119,910,849 | 194,108,817 | 74,197,968 | 38 |

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டில் நடைமுறை மற்றும் உடனடி சொத்துக்களின் விகிதங்கள் 7:1 மற்றும் 5:1 ஆக உள்ளதுடன் கடந்த வருடத்தில் அந்த விகிதங்கள் முறையே 11:1 மற்றும் 7:1 ஆகும். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இருப்பு முறையே ரூபா. 902,523,566 மற்றும் ரூபா. 514,593,147 ஆகவும் குறுகிய கால முதலீடுகள் முறையே ரூபா. 713,680,908 மற்றும் ரூபா. 904,068,523 ஆகவும் இருந்தமை நடைமுறை மற்றும் உடனடி சொத்துக்கள் அதிகரித்துச் செல்வதற்கு முக்கியமான காரணமாக உள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்பட்ட 7.5 மில்லியன் தென்னங்கன்றுகள் உற்பத்தி செயற்திட்டத்திற்காக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் திறைசேரியிடமிருந்து மீள் நிரப்பு செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட தென்னங் கன்றுகளை விற்பனை செய்ததனால் கிடைத்த வருமானமான ரூபா. | தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு பொதுத் திறைசேரியின் மூலம் நிதி வழங்குதல் மேற்கொள்ளப்படுவது நிலையான பதவியணியினரின் சம்பளம் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக மட்டுமே ஆகும். இதன் போது தென்னை பயிர்ச்செய்கை சபையில் தற்காலிக மற்றும் செக்ரோல் ஊழியர் சம்பளத்தைப் போன்றே சுய நிதி அலகின் கீழ் ஆட்சேர்ப்பு | தென்னங்கன்று செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வருமானத்தினை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 814,263,729 பொதுத் திறைசேரிக்கு அனுப்பாது சபையின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ள நிலையான பதவியணிக்கு சம்பளமும் அனைத்து மீண்டெழும் செலவுகளுக்குமான நிதியினை பெற்றுக் கொள்வது சுய நிதி அலகின் நிதியிலிருந்தாகும். அதன்போது சுயநிதி அலகிலிருந்து பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு போதிய அளவு மிகை காணப்படவில்லை. | |
| (ஆ) | தென்னை ஆராய்ச்சி சபையினால் தென்னங் கன்றுகள் நாட்டுதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆலோசனைக் கையேடு A 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உற்பத்தித் திறனான தென்னை பயிர்ச் செய்கைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள CRIC 68, CRIC 65 , CRISL 98, கப்ருவன, கப்சுவய, கப்செத, மொரொக் உயர் மற்றும் உயர் தாவரம் (PP) ஆகிய தென்னை வகைகளை தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 7.5 மில்லியன் தென்னங் கன்றுகளை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக அந்த பரிந்துரைகளுக்கு முரணாக PP2 வகையிலான 2,602,012 தொகையான விதை தேங்காய்கள் தனியார் தோட்டங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த விதைத் தேங்காய்களில் சபைக்கு வழங்கப்பட்டது CRIC 60, மற்றும் CRIC 65 வகையான மட்டுப்படுத்தப்பட்ட விதைத் தேங்காய் தொகையாகும். அதேபோன்று தென்னை பயிர்ச் செய்கை சபையின் மாதிரி தென்னந் தோட்டங்களில் இருந்து மற்றும் வேறு தெரிவு செய்யப்பட்ட விதை தென்னந் தோட்டங்களில் இருந்து ஒரு சில விதை தேங்காய் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 7.5 மில்லியன் தென்னங் கன்றுகளை இலக்காகக் கொள்ளுவதற்கு இந்த விதை தேங்காய் தொகை போதுமானதாக இல்லாததனால் விதை உற்பத்தி அலகில் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் விதை தாய் மரங்கள் தெரிவு செய்யப்பட்டு தரத்தில் உயர்ந்த சிறந்த விதை தெங்காய்களைத் (PP மற்றும் PP2) தனியார் தோட்டங்களில் இருந்து பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 7.5 மில்லியன் விதை தேங்காய் இலக்கினைப் பூர்த்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தென்னை ஆராய்ச்சி சபையினால் உற்பத்தி திறனான தென்னை பயிர் செய்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனை கையேட்டிக்கு அமைய பரிந்துரை செய்யப்பட்ட விதை தேங்காய்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆலோசனைக் கையேடு A 2 இற்கு அமைய நன்கு வளர்ந்த சுமார் 7 - 10 மாத வயதுடைய முறையாகத் தெரிவு செய்யப்பட்ட தென்னங் கன்றுகள் மட்டும் களத்தில் நாட்டப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 13 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/22/1942/616/023 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தென்னை பயிர்ச் செய்கை சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட 10 மாதங்கள் கடந்த அதி வளர்ச்சியுடைய 446,407 தென்னங் கன்றுகள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வீட்டுத் தோட்ட வேலைத் திட்டத்தின் கீழ் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன. அதே போன்று 10 மாதங்களைக் கடந்த அதி வளர்ச்சி அடைந்த 466,926 கன்றுகள் வடக்கு தென்னை செயற்திட்டத்திற்கும் அதே கன்றுகள் 652,359 கப்ருக்க புரவர சங்கத்தின் ஊடாகவும் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட வயதினைக் கடந்த கன்றுகள் குறித்த தொகையொன்று தென்னை பயிர்ச் செய்கை சபையின் நாற்று மேடைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றது. இந்த கன்றுகளை காலப்போக்கில் இன்னமும் வளருவதற்கு இடமளித்தால் அவற்றை முழுமையாக வெட்டுவதற்கு நேரிடும் என்பதால் 10 மாதங்களைக் கடந்த போதிலும் பயிர் செய்கைக்குப் பொருத்தமான கன்றுகளை இலவசமாக வழங்குவதற்குத் தென்னை பயிர்ச் செய்கை சபை தீர்மானித்திருந்தது. இவ்வாறான கன்றுகளைக் களத்தில் நாட்டும் பொழுது பிற்காலத்தில் பராமரிக்கப்பட்டால் பின்னர் சிறந்த தென்னை மரமாக மாறக்கூடியதாக இருக்கும் என்பதனால் தேசிய சொத்து அழிவடைவதைத் தடுப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளில் இருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முறையான ஆய்வு மற்றும் திட்டத்துடன் செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு அமைய முறையாக வளர்ச்சியடைந்த தென்னங் கன்றுகளை மட்டும் களத்தில் நாட்டுவதற்காக வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி மற்றும் சபையின் நிதியம் என்பவற்றை முகாமைத்துவப்படுத்திக் கொண்டு தென்னங் கன்றுகளைக் கொண்டு செல்லுதல் மற்றும் நிர்வகித்தல் செலவுகளை ஏற்க நேரிட்ட போதிலும் விநியோகிக்கப்பட்ட அதி வளர்ச்சி அடைந்த 446,407 தொகை கன்றுக்காக கன்றுகளைக் கொண்டு செல்லும் மொத்த செலவாக ரூபா. 40 மில்லியனும் நிர்வாக செலவாக ரூபா. 8.88 மில்லியனுமாக ரூபா. 48.88 மில்லியன் 2023 ஆம் ஆண்டில் மூலதன மானியமாகத் திறைசேரியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு அமைய இலவசமாக விநியோகிக்கப்பட்ட அதி வளர்ச்சி | எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்கள் கன்றுகளைப் பெற்றுக் கொள்ளாததனால் அந்த கன்றுகள் அழிவடைவதைத் தடுத்து கன்றுகளின் தேவைப்பாடு உள்ள பிரதேசங்களுக்குக் கூடிய விரைவில் கொண்டு சென்று வழங்குவதே சபையின் நோக்கமாக இருந்தது. அதற்காக நியாயமான போக்குவரத்து செலவினை விட அதிக தொகையினைச் செலவிடுவதற்கு சபைக்கு நேரிட்டிருந்தது. | முறையான ஆய்வு மற்றும் திட்டத்துடன் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதன் மூலம் அனாவசியமான செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்த ஒரு தென்னங் கன்றுக்கு போக்குவரத்து மற்றும் நிர்வாக செலவாக ரூபா. 110 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையில் 7.5 மில்லியன் தென்னங் கன்று செயற்திட்டத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட 30 மாதங்களைக் கடந்த 138,101 நிலம் மற்றும் தொட்டி கன்றுகள் விவசாய ரீதியில் விநியோகிக்கப்பட முடியாது மாதிரி தென்னந் தோட்டங்களில் கைவிடப்பட்டிருந்தன. | 7.5 மில்லியன் தென்னங் கன்றுகள் போன்ற பாரிய இலக்கொன்று அப்போது இருந்த அரச உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய நிலையற்ற தன்மையின் அடிப்படையில் அந்த கன்றுகளை விநியோகிப்பதற்கு முறையான திட்டம் ஒன்று சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த தென்னங் கன்றுகள் 10 மாதங்களைக் கடந்து பாரிய அளவில் வளர்ச்சி அடைந்திருந்தன. எவ்வாறு இருப்பினும் வழங்கப்படக் கூடிய அதிகபட்ச முறையில் கன்றுகளை விநியோகித்த போதிலும் 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையில் மாதிரி தென்னந் தோட்டங்களில் 30 மாதங்களைக் கடந்த நிலம் மற்றும் பாத்திர கன்றுகள் விவசாய ரீதியில் விநியோகிக்கப்பட முடியாத நிலைமையில் உள்ளன. | தென்னங் கன்றுகளைக் குறித்த காலத்தில் விநியோகிப்பதற்கு மற்றும் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | சமுர்த்தி பயனாளர் குடும்பங்களுக்காக செயல்படுத்தப்பட்ட தேசிய வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு வழங்குவதற்காக 500,000 தென்னங் கன்றுகளை சிலாபம் பெருந்தோட்ட கம்பனியிடமிருந்து கொள்வளவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் ரூபா. 125 மில்லியன் அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 நவம்பர் 25 ஆம் திகதி வரையிலும் 375,000 தென்னங் கன்றுகள் மட்டுமே சபையிடம் வழங்கப்பட்டிருந்தது. ரூபா. 31.25 மில்லியன் பெறுமதியான 125,000 தென்னங் கன்றுகள் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலும் சபையிடம் கிடைத்திருக்கவில்லை. | தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு நிலுவையாக இருந்த இந்த கன்றுகளுக்கான கட்டளை 2021 ஆம் ஆண்டில் சிலாபம் பெருந்தோட்ட கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த கம்பனி தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு வழங்கி இருந்த ஒருசில கன்றுகள் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் கையேடு A2 இற்கு அமைய பொருந்தி இருக்கவில்லை. பணம் கொடுத்து தரமற்ற கன்றுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றை பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்குதல் பொருத்தமற்றது என்பதனால் அந்தப் பொருத்தமற்ற கன்றுகளை சபை நிராகரித்திருந்தது. முக்கியமாக | சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு வழங்கப்பட்ட பணத்திற்கான போதியளவான தென்னங் கன்றுகளை பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்தப்பட்ட பணத்தினை மீள அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அந்த கன்றுகளைக் கையேற்பதற்காக சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நாற்று மேடைகளுக்கு சென்ற பிரதேச முகாமையாளர்களுக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சபையின் மூலம் சிலாபம் பெருங்கோட்ட கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்குப் பொருத்தமான பதில் கிடைக்காத போது குறித்த பணத் தொகையினை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 12 மாதிரி தென்னந் தோட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தியின் பௌதீக இலக்கு 6,496,100 தேங்காய்களாக இருந்தது எனினும் பௌதீக முன்னேற்றமானது 4,986,634 தேங்காய்கள் ஆகும். மேலும் வருமான ஈட்டல் இலக்கு ரூபா. 398,016,196 ஆக இருந்தது எனினும் உண்மையான வருமானம் ரூபா. 299,415,290 ஆகும். அதற்கு அமைய தேங்காய் உற்பத்தி தொடர்பான பௌதீக இலக்குடன் ஒப்பிடும் போது முன்னேற்றம் 23 சதவீதத்தினாலும் மற்றும் வருமானம் 25 சதவீதத்தினாலும் குறைவடைந்து இருந்தது. | சபையின் மாதிரி தென்னந் தோட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டின் பின்னர் தேவையான உரத்தினைப் போதுமானளவில் இடாமை எதிர்வு கூறப்பட்ட அறுவடை கிடைக்காததற்குக் காரணமாக உள்ளது. தேசிய தேங்காய் விளைச்சலிலும் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மாதிரி தென்னந் தோட்டங்களில் பாரிய அளவில் காணப்படும் மரங்களின் காரணமாகவும் தேங்காய் உற்பத்தி குறைவடைந்துள்ளது. | சபைக்கு சொந்தமான மாதிரி தென்னந் தோட்டங்களில் தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | தென்னை பயிர்ச் செய்கை சபையின் 12 மாதிரி தென்னந் தோட்டங்களிலும் தேங்காய் விளைச்சல் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் 13 சதவீதம் தொடக்கம் 37 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது. | 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக தேசிய தேங்காய் விளைச்சலிலும் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நீண்ட காலமாக உரம் இடாததன் தாக்கம் வருடத்திற்கு வருடம் படிப்படியாக அதிகரித்த காரணத்தால் இவ்வாறு தேங்காய் விளைச்சல் குறைவடைவதில் பிரதான தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. | சபைக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களில் தேங்காய் விளைச்சலை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | இலக்கம் CCB/CRIU/CMG & ND/2022-01 கொண்ட 2022 மே 05 ஆம் திகதியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் விழும் தேங்காய்களை 10 | விழும் தேங்காய்களை 10 சதவீதத்திலும் அதிகரிக்காதவாறு இருக்க நடவடிக்கை எடுக்குமாறு மாதிரி தென்னந் தோட்டங்களுக்கு தொடர்ச்சியாக | தேங்காய்களைப் பறிப்பதில் உள்ள சிரமங்களைத் தவிர்த்துக் கொண்டு விழுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்திலும் அதிகரிக்காதவாறு இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னந் தோட்டங்களில் 8 தோட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் மொத்த தேங்காய் விளைச்சலில் விழுந்த தேங்காய்கள் 11 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையிலாகும். | ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் மாதிரி தென்னந் தோட்டங்களில் பாரிய அளவில் கொக்கிகள் மூலம் பறிக்கப்பட முடியாத உயரமான மரங்கள் காணப்படுகின்றன என்பதால் தேங்காய்களைப் பறிக்கும் போது சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன், அதன் மூலமும் விழுகின்ற தேங்காய்களின் சதவீதம் அதிகரித்துள்ளது. தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட அனைத்து பெருந்தோட்ட கம்பனிகள் விழுகின்ற தேங்காய்கள் 20 சதவீதமளவான பெறுமதியினைப் பேணிக் கொண்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் விழுகின்ற தேங்காய் சதவீதம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள 2022.05.05 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் CCB/Criu/CMG &ND/2022-01 கொண்ட சுற்றறிக்கையை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேங்காய்களின் சதவீதத்தினைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னந் தோட்டங்களில் முந்தலம், கொஹொம்பான, கர்ட்லண்ட், ரன்தெனிய, பாசிக்குடா ஆகிய 05 தென்னந் தோட்டங்களில் கருப்பு வண்டு சேதத்தினால் அழிவடைந்த 194 மரங்களும், முந்தலம், போபிடிய, கொஹொம்பான, கர்ட்லண்ட், கொரெய், நாகன்சோல, ரன்தெனிய, பளை, பாசிக்குடா ஆகிய 09 தென்னந் தோட்டங்களில் சிவப்பு வண்டு சேதத்தினால் 276 மரங்களும் அழிவடைந்திருந்தன, மேலும் பாசிக்குடா தென்னந் தோட்டத்தில் மைட்டா சேதத்தினால் 1,100 தென்னை மரங்களும் வெள்ளை ஈ சேதத்தினால் 320 தென்னை மரங்களும் அழிவடைந்து இருந்தது அவதானிக்கப்பட்டது. | மாதிரி தென்னந் தோட்டங்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்த பூச்சிகளின் சேதத்தினை தடுப்பதற்குக் குறித்த உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், முக்கியமாக மாதிரி தென்னந் தோட்டங்களில் காணக்கூடியதாக இருக்கும் வெள்ளை வண்டு மற்றும் கருப்பு வண்டு சேதங்களைத் தடுப்பதற்கு முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தெளிவுபடுத்தல்கள் மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வெள்ளை ஈக்களின் சேதத்தினால் தென்னை மரங்களின் இலைகளுக்கு ஒருசில சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், அந்த சேதத்தினை தவிர்த்துக் | பயிர்ச் செய்கையினை பல்வேறு பூச்சிகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்வதற்கு தேவையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது நோய் சேதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் முக்கியமான 3 பதவிகளான பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) பிரதி பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி) ஆகிய பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் வெற்றிடமாக காணப்பட்டது. பிரதி பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பதவி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட 1,070 பதவிகளில் (தென்னை பயிர்ச் செய்கை மற்றும் மாதிரி தென்னந் தோட்டங்கள்) 356 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் தேவைப்பாட்டிற்கு அமைய முக்கியமான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 ஆம் ஆண்டில் 77 பதில் கடமைப் பதவிகளுக்காக ரூபா. 6,783,326 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் பதவி உயர்வு பெற்றுக் கொண்ட காரணத்தினால் 2023.07.06 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடமாகியுள்ளது. அதே போன்று பிரதி பொது முகாமையாளர் (விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி) பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தரும் 2023.11.23 ஆம் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளார். இவ்வாறு வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையின் பிரகாரம் முறையாக ஆட்சேர்ப்பு செய்வதை மேற்கொள்வதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. அதே போன்று பிரதி பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் 2016.05.03 ஆம் திகதி தொடக்கம் பதவி உயர்வு பெற்றுக் கொண்ட காரணத்தினால் வெற்றிடமானதுடன் அந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முறையான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி 2024.04.30 ஆம் திகதி கிடைத்துள்ளது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ள முக்கியமான பதவிகளுக்குத் தாமதமின்றி ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |